7910

Register Number | | | | | |

# தமிழ் — இரண்டாம் தாள்

காலம் : $2\frac{1}{2}$ மணி ]

[ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு :* i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

ii) முகவுரை, பொருளுரை, முடிவுரை என்ற அமைப்பில் கட்டுரை அமைதல் வேண்டும்.

I. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் **ஒன்று** பற்றி இரு பக்கங்களில் கட்டுரை வரைக.

$1 \times 10 = 10$

1. குருவிப்பட்டிப் பாலமும், பொன்னம்பலமும்.
2. 'மண்ணாசை' - பெயர்ப் பொருத்தத்தை ஆய்க.
3. பங்கஜத்தின் குணநலன்கள்.

II. கீழ்வருவனவற்றுள் ஏதேனும் **ஒன்று** பற்றிக் கடிதம் வரைக. $1 \times 10 = 10$

(*குறிப்பு :* கடிதத்தில் கையொப்பமிடும் இடத்தில் 'X' என்று குறிப்பிடவும். பெயரோ, பதிவு எண்ணோ அல்லது முகவரியோ எழுதினால் விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட மாட்டாது.)

4. நும் ஊரில் விளையாட்டு மைதானம் அமைத்திட வேண்டி, நகராட்சி ஆணையருக்கு விண்ணப்பம் வரைக.
5. நீ கண்டுகளித்த அறிவியல் கண்காட்சி குறித்து நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.
6. நும் பகுதியில் அஞ்சல்பெட்டி அமைத்துத் தருமாறு, அஞ்சலகத் தலைவருக்கு ஒரு விண்ணப்பம் வரைக.

III. 7. கீழ்க்காணும் பாடலைப் படித்து பின்வரும் **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

$5 \times 2 = 10$

பூட்டைத் திறப்பது கையாலே - நல்ல
மனந்திறப்பது மதியாலே
பாட்டைத் திறப்பது பண்ணாலே - இன்ப
வீட்டைத் திறப்பது பெண்ணாலே
ஏட்டைத் துடைப்பது கையாலே - மன
வீட்டைத் துடைப்பது மெய்யாலே
வேட்டையடிப்பது வில்லாலே - அன்புக்
கோட்டை பிடிப்பது சொல்லாலே
காற்றை யடைப்பது மனதாலே - அந்தக்
காயத்தைக் காப்பது செய்கையாலே
சோற்றைப் புசிப்பது வாயாலே - உயிர்
துணிவு ஆவது தாயாலே.

*வினாக்கள் :*

i) மனதை எதனால் திறக்க வேண்டும் ?

ii) சொல்லால் என்ன செய்ய வேண்டும் ?

iii) உடலை எப்படிக் காப்பாற்ற வேண்டும் ?

iv) தாயால் உயிர் என்னவாகிறது ?

v) இப்பாடலில் அமைந்துள்ள இரண்டு எதுகை மோனைகளைச் சுட்டுக.

[ Turn over

IV. 8. கீழ்க்காணும் உரைநடையை *மூன்றில் ஒரு பங்காகச்* சுருக்கி எழுதுக : 1 × 10 = 10

வாழ்க்கையை அகம், புறம் என இரு பிரிவுகளாக்கிய ஓர் இலக்கிய மரபு நம் தமிழ்மொழியில் பண்டைக் காலம் முதலே வழக்கத்தில் இருந்தது. காதலும், வீரமும், இவற்றைச் சார்ந்த பண்புகளும் நுண்மையாக சங்க இலக்கியத்தில் எடுத்துரைக்கப்படுகின்றன. அகத்திணைகள் ஐந்தும், புறத்திணைகள் ஏழும், துறைகள் பலவும் சங்க இலக்கியத்தின் சிறப்பான பகுப்புகளாம். மனித வாழ்வையே களமாகக் கொண்டு மெய்ம்மையியல் எனப்படும் நடப்பியலைச் சொற்களில் வடித்து வைத்த கலைநுட்பம் மிகவும் பாராட்டுதற்குரியது. சங்க இலக்கியம் மனிதனின் உணர்வுகளை, தமிழனின் தனிப்பண்புகளை என்றும் அழியாத எழுத்துச் செல்வமாய்த் திரட்டிவைத்தது. சிந்தனையைத் துலங்கச் செய்த முயற்சியில் வெற்றியும் பெற்றது.

V. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக :

9. அன்பின் ஐந்திணைகள் யாவை ? 1 × 2 = 2

*அல்லது*

முதற்பொருள் என்பது யாது ?

10. பாடாண்திணையை விளக்குக. 1 × 2 = 2

*அல்லது*

தும்பைத் திணையாவது யாது ?

11. பா எத்தனை வகைப்படும் ? அவை யாவை ? 1 × 2 = 2

*அல்லது*

நேரிசையாசிரியப்பாவின் இலக்கணம் எழுதுக.

12. கீழ்க்காணும் குறளை அலகிட்டு வாய்பாடு கூறுக : 1 × 2 = 2

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்

காக்கினென் காவாக்கா லென்.

13. கீழ்க்காணும் சொற்களில் எவையேனும் **இரண்டனுக்குப்** பகுபத உறுப்பிலக்கணம் தருக : 2 × 2 = 4

i) தீண்டினார் ii) நீக்கிய

iii) கண்டனன் iv) தாழ்ந்த.

14. கீழ்க்காணும் சொற்களில் எவையேனும் **இரண்டனுக்கு** இலக்கணக் குறிப்பு தருக: $2 \times 2 = 4$

i) நீள்புகழ்
ii) எந்தை
iii) களிவெள்ளம்
iv) வெண்சாமரை.

15. கீழ்க்காணும் சொற்களில் எவையேனும் **இரண்டனுக்குப்** புணர்ச்சி இலக்கணம் தருக: $2 \times 2 = 4$

i) பாசிலை
ii) வெற்றிலை
iii) பதிவெண்
iv) தென்மேற்கு.

16. கீழ்க்காணும் இரு வினைமுற்றுகளில் ஏதேனும் **ஒன்றனுக்குத்** தொழிற்பெயர் எழுதுக : $1 \times 2 = 2$

i) இறந்தார்
ii) பறந்தன.

17. பிரிமொழிச் சிலேடையை எடுத்துக்காட்டுடன் விளக்குக. $1 \times 4 = 4$

*அல்லது*

''உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.''

- இக்குறட்பாவில் பயின்றுள்ள அணியைச் சுட்டி விளக்குக.

18. கீழ்க்காணும் ஏதேனும் **ஒன்றனுக்கு** விடை தருக : $1 \times 2 = 2$

பால் வழுவமைதியைச் சுட்டுக.

*அல்லது*

வினா எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

19. கீழ்க்காணும் ஏதேனும் **ஒன்றனுக்கு** விடை தருக : $1 \times 2 = 2$

மொழி எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

*அல்லது*

ஐகாரக் குறுக்கமாவது யாது ? சான்றுடன் விளக்குக.

VI. 20. கீழ்க்காணும் உரைநடையைப் படித்துத் தகுந்த நிறுத்தற் குறியிடுக : $1 \times 2 = 2$

இளங்கோ எழுதிய கண்ணகியின் காவியத்தைப் படி பலமுறை படி என்றும் படி கியூரி அம்மையாரின் வரலாற்றையும் கஸ்தூரிபா காந்தியின் வரலாற்றையும் திரும்பத் திரும்பப் படி.

21. கீழ்க்காணும் சொற்களில் **இரண்டனுக்குத்** திருந்திய சொற்களை எழுதுக : $2 \times 1 = 2$

i) குடக்கூலி
ii) தோப்பனார்
iii) காவா
iv) வேர்வை.

22. கீழ்க்காணும் சொற்களில் இரண்டினைப் பிரித்து எழுதுக : $2 \times 1 = 2$

i) நாடெலாம் ii) தூய்மையாக

iii) வரவுண்மை iv) அங்கண்.

23. கீழ்க்காணும் தொடர்களில் உள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக : $3 \times 2 = 6$

i) கோபுறத்தின் உறுவம் சிரியதாக அவர் கண்ணாடியில் வந்து தெறிந்தது.

ii) உல்லங்கை நெள்ளிக்கனி.

iii) புளி பசித்தாலும் புள்ளைத் திண்ணாது.

24. கீழ்க்காணும் வேற்றுமொழிச் சொற்களுக்குத் தனித்தமிழ்ச் சொற்களை எழுதுக : $2 \times 1 = 2$

i) சேவை ii) சர்க்கார்.

25. கீழ்க்காணும் தொடரைச் செய்தி வாக்கியமாக மாற்றுக : $1 \times 2 = 2$

என்னே ! பெரியாரின் பொதுநலத் தொண்டு.

26. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப்பிழைகளை நீக்கி எழுதுக : $1 \times 2 = 2$

அந்த காலத்தில் சிதம்பரனாரது சொற்பொழிவு இல்லாத கூட்டத்தை காண்பதரிது.

27. கீழ்க்காணும் தொடரை வினாத் தொடராக மாற்றுக : $1 \times 2 = 2$

அரங்கேற்றம் ஒரு பெரிய திருவிழாவைப் போல நடைபெறும்.

VII. 28. கீழ்க்காணும் ஆங்கிலத் தொடர்களைத் தமிழில் மொழிமாற்றம் செய்க : $1 \times 4 = 4$

Air pollution is high in the urban and industrial centres. It threatens the life of the people and animals. The gases from industrial centres go higher than the oxygen in the air and make it polluted. Pollution affects plants, animals and human beings. It causes diseases like asthma and cancer. Small children are easily affected.

29. கீழ்க்காணும் மரபுத் தொடர்கள் அல்லது பழமொழிகளில் எவையேனும் மூன்றனைத் தமிழில் மொழிபெயர்க்க : $3 \times 2 = 6$

i) Bare words buy no barley.

ii) Self help is the best help.

iii) Honesty is the best policy.

iv) No smoke without fire.

v) A young calf knows not fear.